## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரப் பொதுக் கூட்டம்!

## ‘வேலூர் – வெல்லும் ஊர்’ என நிரூபித்த மக்கள் திரள்!



### பிரதமர் மோடிக்கும், பியூஷ் கோயலுக்கும் நாவடக்கம் தேவை! படிப்பறிவற்றவர்கள் என

# தமிழர்களை இழிவுபடுத்தி - நெருப்போடு விளையாட வேண்டாம்!

### வேலூர் – தேர்தல் பிரச்சாரப் பிரம்மாண்டப் பொதுக்கூட்டத்தில்

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**வேலூர், ஏப்.15**

**“தமிழ்நாடு தன் இறுதி எச்சரிக்கையை விடுத்துவிட்டது; நெருப்போடு விளையாட வேண்டாம் பிரதமர் அவர்களே! தமிழர்களைப் படிப்பறிவற்றவர்கள் என்பதா? பியூஷ் கோயல் நாவை அடக்கிப் பேச வேண்டும்!” என்றும், ‘பழனிசாமிக்கு திராவிடமும் தெரியாது; அண்ணாவும் தெரியாது: அதனால்தான் ஒட்டுமொத்த தமிழ்நாடும் பழனிசாமியை அரசியல் அவமானமாகப் பார்க்கிறது’ என்று வேலூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாக எச்சரித்தார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14-04-2026) வேலூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:**

இந்திய விடுதலைக்கான புரட்சி துவங்கிய வேலூருக்கு நான் வந்திருக்கிறேன். நாம் யாருக்கும் அடிமை இல்லை என்று முழங்கிய இந்த மண்ணில் இருந்து, டெல்லியின் ஆதிக்கத்திற்கு எதிராகத் தீர்ப்பெழுத உங்கள் ஆதரவைக் கேட்டு வந்திருக்கிறேன். “வீழ்ந்து கிடந்தால் விடியல் இல்லை” என்று உணர்த்திய வேலூர் மண்ணில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு கேட்டு வந்திருக்கிறேன்!

**கிராமங்கள் முதல் கோட்டை வரை உதயசூரியனுக்குத்தான் ஆதரவு!**

இடைவிடாத இந்தப் பிரச்சாரப் பயணத்தில், தமிழ்நாட்டின் பாதிப் பகுதிகளைச் சுற்றி வந்துவிட்டேன். ஒவ்வொரு நாளும் இரண்டு மாவட்டங்களுக்குப் பயணிக்கிறேன். இலட்சக்கணக்கான மக்களை நேரில் சந்திக்கிறேன். நான் சந்திக்கும் ஒவ்வொருவரும் சொல்வது என்னவென்றால், “தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சிப் பயணம் தொடர வேண்டும்; அதற்கு உங்களது திராவிட மாடல் ஆட்சிதான் மீண்டும் அமைய வேண்டும்” என்று சொல்கிறார்கள். கிராமங்களில் இருந்து கோட்டை வரைக்கும் உதயசூரியனுக்குத்தான் ஆதரவு இருக்கிறது! “இது நம்ம காலம், இறங்கி ஆடுங்கள் தலைவரே” என்று சொல்கிறார்கள்! இறங்கி ஆட நான் ரெடி… திராவிட மாடல் 2.0 ஆட்சிக்கு நீங்கள் ரெடியா? நன்றி! இப்போது, உங்கள் அனுமதியுடன் நமது வெல்லும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தலாமா?

**பெருமைக்குரிய அண்ணன் துரைமுருகனுக்கு வெற்றியைத் தாருங்கள்!**

முதலில், காட்பாடி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கழகத்தின் பொதுச்செயலாளர் மாண்புமிகு அமைச்சர் என்னுடைய ஆருயிர் அண்ணன் துரைமுருகன் அவர்கள். அரசியல் வரலாற்றில் 13-வது முறையாகச் சட்டமன்றத் தேர்தலில் களம் காணும் பெருமைக்கு உரியவர். தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அதன்பிறகு



எனக்கும் உறுதுணையாக இருந்து இயக்கப் பணி ஆற்றி வருபவர். மாணவப் பருவம் தொட்டு, இன்று 87 வயதிலும் கழகப் பணியையும், மக்கள் பணியையும் இளமைத் துடிப்புடன் செய்பவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும்.

**வெல்லும் வேட்பாளர்கள்!**

அடுத்து, அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஏ.பி. நந்தகுமார் அவர்கள். இரண்டு முறை வெற்றி பெற்று இந்தத் தொகுதி மக்களுக்குத் தேவையான பல திட்டங்களை நிறைவேற்றியவர். கே.வி. குப்பம் ஒன்றிய மாணவரணித் தலைவராக வாழ்க்கையைத் தொடங்கி, இன்று வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளராக உயர்ந்திருக்கிறார். அவருக்கு 2016, 2021 தேர்தல்களில் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைத் கொடுத்தது போன்று, மூன்றாவது முறையும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அத்தனை பெரும் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, வேலூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கார்த்திகேயன் அவர்கள். வேலூர் மாநகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். 2016, 2021 இரண்டு தேர்தல்களிலும் வென்று உங்கள் குரலாகச் சட்டமன்றத்தில் ஒலித்தவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அனைவரும் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து கே.வி. குப்பம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் எம். ராஜேஸ்வரி அவர்கள். மருத்துவரான இவர், தி.மு.க. மருத்துவர் அணியின் மாநிலத் துணை அமைப்பாளராகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். மருத்துவப் பணியில் இருந்து அரசியல் பணிக்கு வந்திருக்கிறார். முதன்முறையாகத் தேர்தல் களம் காணும் மருத்துவரான அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அனைவரும் ஆதரவளித்திட வேண்டும்.

அடுத்து, குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தே.மு.தி.க.வைச் சேர்ந்த கே.பி. பிரதாப் அவர்கள். நினைவில் வாழும் என்னுடைய அருமைச் சகோதரர் நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்களது அன்பைப் பெற்றவர். கூட்டணிக் கட்சியான தே.மு.தி.க.வின் பொதுச்செயலாளர் அருமைச் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளவர். அவருக்கு முரசு சின்னத்தில் நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும்.

இந்த வேட்பாளர்களது வெற்றி உறுதிதானே? வேட்பாளர்கள் அமரலாம்!

**மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி வளர்ச்சியை நோக்கி பயணிப்பதால் தண்டிப்பதா?**

எப்படிப்பட்ட நிலையில் நாம் இந்தத் தேர்தலைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று தமிழ்நாட்டு மக்கள் உணர வேண்டும்! இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, பசியும் வறுமையும்தான் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கை நிலையாக இருந்தது. அந்த அவலநிலையை மாற்ற வேண்டும் என்று இந்திய அரசு கொண்டு வந்ததுதான் குடும்பக் கட்டுப்பாடு திட்டம்! “அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்” என்று சொன்னார்கள். சொன்ன மாதிரியே, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களும், இன்னும் சில மாநிலங்களும் அளவோடு பெற்று, வளமான எதிர்காலத்தை நோக்கி நடைபோட ஆரம்பித்திருக்கிறோம்.

ஆனால், இப்போது ஒன்றிய அரசு என்ன பண்ணப் போகிறது என்றால், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி, வளர்ச்சியை நோக்கி நடைபோட்டதற்காகவே நம்மைத் தண்டிக்கப் பார்க்கிறார்கள். நடக்கப் போகும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இதற்கான சதித் திட்டத்தைச் சட்டமாக நிறைவேற்றலாம் என்று திட்டமிட்டு இருக்கிறார்கள்… இன்றைக்கு மதியம் கூட இதுசம்பந்தமாக, மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களுக்கு நான் எச்சரிக்கை விடுத்து வீடியோ வெளியிட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு என்பதை வெறும் மாநிலமாகவோ, நிலப்பரப்பாகவோ மட்டும் பார்க்கக் கூடாது! எட்டுக் கோடி தமிழ்மக்களின் உணர்வும், உரிமைக்குரலும்தான் தமிழ்நாடு! தமிழ்நாட்டின் குரல்வளையை நெரிக்க நினைத்தால் நாம் சும்மா இருக்கக் கூடாது!

**பியூஷ்கோயலின் திமிர் பேச்சு தமிழ்நாட்டில் வேண்டாம்!**

நாம் எதிர்கொண்டிருக்கும் ஆபத்து குறித்து, ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து கொண்டிருக்கின்ற பாசிச, நாசகார வேலைகள் குறித்துப் பேசினால், “படிப்பறிவற்றவர்கள்” என்று சொல்லியிருக்கிறார் பியூஷ் கோயல் அவர்கள். மிகவும் திமிர்த் தனமாக நாவடக்கமின்றி பேசுகிறார்.

பியூஷ் கோயல் அவர்களே… நாவை அடக்கிப் பேசுங்கள்! நீங்கள் தமிழ்நாட்டு பா.ஜ.க.வுக்கு மட்டும்தான் இன்-சார்ஜ். அதை மறந்துவிட்டு, அத்துமீறி வாய்க்கொழுப்புடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்… இங்கு மரியாதை கொடுத்தால்தான், திரும்ப மரியாதை கிடைக்கும்! பா.ஜ.க. தமிழ்நாட்டை பற்றித் தவறாக எடைபோட்டுக் கொண்டிருக்கிறது!

மாண்புமிகு பிரதமர் அவர்களே… உங்கள் முன்னால் கைகட்டிக்கொண்டு அடிமையாக இருக்கிறார்களே சிலர்… அவர்களை வைத்துத் தமிழ்நாட்டைக் குறைத்து எடைபோடாதீர்கள்… தமிழர்கள் அறிவானவர்கள் – சுயமரியாதைமிக்கவர்கள்! எங்கள் தன்மானத்தின் மீது கை வைத்தால், டெல்லியில் இருக்கும் உங்களது ஆணவத்துக்கு நாங்கள் கொடுக்கும் பதிலடி கடுமையானதாக இருக்கும்!

**நம் தலைவர்களின் ஆற்றல் தமிழ்நாட்டு மக்கள் ரூபத்தில் என்கூட இருக்கிறது!**

தமிழ்நாட்டுக்காக, தமிழினத்துக்காகப் போராட இப்போது யார் இருக்கிறார்கள்? தந்தை பெரியார் இல்லை; பெருந்தலைவர் காமராசர் இல்லை; பேரறிஞர் அண்ணா இல்லை; தலைவர் கலைஞர் இல்லை என்று நினைத்தீர்கள் என்றால், அது பெரிய தவறு! அவர்களது முழு உருவமாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்! அவர்களது ஆற்றல் எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ரூபத்தில் என்கூட இருக்கிறது! கடைசி மூச்சு இருக்கும்வரைக்கும், தமிழ்நாட்டினது, தமிழினத்தின் உரிமைகளுக்காக இந்த ஸ்டாலின் களத்தில் நிற்பான்! சண்டை செய்துகொண்டே இருப்பான்!

தொடர்ச்சி 6 –ஆம் பக்கம்

**சாதனைச் சரித்திரம்தான்**

**திராவிட மாடல்!**

**நமது திராவிட மாடல் ஆட்சியில் சதிகளை முறியடித்துச் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறோம்! அடிமைத்தனத்தை ஒழித்து, அதிகார மிரட்டல்களைத் தவிடுபொடியாக்கி, அன்பால் மக்களை ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம்! வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல; கோடிக்கணக்கான தமிழ் மக்களின் புன்னகையால் எழுதப்பட்டிருக்கும் சாதனைச் சரித்திரம்தான் திராவிட மாடல்!**